பெரியாழ்வார் அருளிச் செய்த
பெரியாழ்வார் திருமொழி
ஐந்தாம் பத்து

மூன்றாம் திருமொழி - துக்கச் சுழலையை
திருமாலிருஞ்சோலை எம்பெருமானைப் போக ஒட்டேன் என்று தடுத்தல்

** துக்கச் சுழலையைச் சூழ்ந்து கிடந்த * வலையை அறப்பறித்து *
புக்கினில் புக்குன்னைக் கண்டு கொண்டேன் * இனிப் போக விடுவதுண்டே? **
மக்கள் அறுவரைக் கல்லிடை மோத * இழந்தவள் தன் வயிற்றில் *
சிக்கன வந்து பிறந்து நின்றாய்! * திருமாலிருஞ்சோலை எந்தாய்! 1

வளைத்து வைத்தேன் இனிப் போகல் ஒட்டேன் * உன்தன் இந்திர ஞாலங்களால் *
ஒளித்திடில் நின் திருவாணை கண்டாய் * நீ ஒருவர்க்கும் மெய்யன் அல்லை **
அளித்தெங்கும் நாடும் நகரமும் * தம்முடைத் தீவினை தீர்க்கல் உற்று *
தெளித்து வலஞ்செய்யும் தீர்த்தமுடைத் * திருமாலிருஞ்சோலை எந்தாய்! 2

** உனக்குப் பணி செய்திருக்கும் தவம் உடையேன் * இனிப் போய் ஒருவன்
தனக்குப் பணிந்து * கடைத்தலை நிற்கை * நின் சாயை அழிவு கண்டாய் **
புனத்தினைக் கிள்ளிப் புது அவி காட்டி * உன் பொன்னடி வாழ்க என்று *
இனக்குறவர் புதியதுண்ணும் * எழில் திருமாலிருஞ்சோலை எந்தாய்! 3

காதம் பலவும் திரிந்துழன்றேற்கு * அங்கோர் நிழல் இல்லை நீர் இல்லை * உன்
பாத நிழல் அல்லால் மற்றோர் உயிர்ப்பிடம் * நான் எங்கும் காண்கின்றிலேன் **
தூது சென்றாய்! குரு பாண்டவர்க்காய் * அங்கோர் பொய் சுற்றம் பேசிச் சென்று *
பேதம் செய்தெங்கும் பிணம் படுத்தாய்! * திருமாலிருஞ்சோலை எந்தாய்! 4

காலும் எழா கண்ணநீரும் நில்லா * உடல் சோர்ந்து நடுங்கி * குரல்
மேலும் எழா மயிர்க்கூச்சும் அறா * என தோள்களும் வீழ்வொழியா **
மால் உகளா நிற்கும் என் மனமே! * உன்னை வாழத் தலைப்பெய்திட்டேன் *
சேல் உகளா நிற்கும் நீள் சுனை சூழ் * திருமாலிருஞ்சோலை எந்தாய்! 5

எருத்துக் கொடி உடையானும் * பிரமனும் இந்திரனும் * மற்றும்
ஒருத்தரும் இப்பிறவி என்னும் நோய்க்கு * மருந்தறிவாரும் இல்லை **
மருத்துவனாய் நின்ற மாமணிவண்ணா! * மறு பிறவி தவிரத்
திருத்தி * உன் கோயில் கடைப் புகப்பெய் * திருமாலிருஞ்சோலை எந்தாய்! 6

அக்கரை என்னும் அனத்தக் கடலுள் அழுந்தி * உன் பேரருளால் *
இக்கரை ஏறி இளைத்திருந்தேனை * அஞ்சேல் என்று கை கவியாய் **
சக்கரமும் தடக்கைகளும் * கண்களும் பீதக ஆடையொடும் *
செக்கர் நிறத்துச் சிவப்புடையாய்! * திருமாலிருஞ்சோலை எந்தாய்! 7

எத்தனை காலமும் எத்தனை ஊழியும் * இன்றொடு நாளை என்றே *
இத்தனை காலமும் போய்க் கிறிப்பட்டேன் * இனி உன்னைப் போகல் ஒட்டேன் **
மைத்துனன்மார்களை வாழ்வித்து * மாற்றலர் நூற்றுவரைக் கெடுத்தாய்! *
சித்தம் நின் பாலதறிதி அன்றே * திருமாலிருஞ்சோலை எந்தாய்! 8

அன்று வயிற்றில் கிடந்திருந்தே * அடிமை செய்யல் உற்றிருப்பன் *
இன்று வந்திங்கு உன்னைக் கண்டு கொண்டேன் * இனிப் போக விடுவதுண்டே? **
சென்றங்கு வாணனை ஆயிரம் தோளும் * திருச்சக்கரம் அதனால்
தென்றி * திசை திசை வீழச் செற்றாய்! * திருமாலிருஞ்சோலை எந்தாய்! 9

** சென்றுலகம் குடைந்தாடும் சுனைத் * திருமாலிருஞ்சோலை தன்னுள்
நின்ற பிரான் * அடி மேல் அடிமைத் திறம் * நேர்பட விண்ணப்பம் செய் **
பொன் திகழ் மாடம் பொலிந்து தோன்றும் * புதுவைக்கோன் விட்டுசித்தன் *
ஒன்றினோடு ஒன்பதும் பாட வல்லார் * உலகம் அளந்தான் தமரே 10

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்